விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 12.35 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 12.48 p.m
மீண்டும் விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 03.40 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 03.50 p.m

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, METTUR

Case No :C.C.No.324/2023

Prosecution side witness : எ.ம.சா.4 Date : 25.02.2025

| | |
|---|---|
| Name : சுரேஷ் | Taluk : ஈரோடு |
| Father Name : மணி | Calling : கன்சல்டிங் |
| Village : ஈரோடு திருநகர் காலனி | Age : 42 |

(Complainant and accused present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான், சக்தி மற்றும் எதிரி சுதாகர் மூவரும் சேர்ந்து ஸ்ரீபாலாஜி பெசன்ஸ் பெயரில் தொழில் நடத்தி வந்தோம். 2 மாதங்களுக்கு ஒரு முறை வரவு செலவுகளை பார்ப்போம். என்னிடம் காட்டப்படும் வரவு செலவு நோட்டில் 19 வது பக்கத்தில் உள்ள 3 வது கையெழுத்து என்னுடையது தான். 18.02.2018 ல் வரவு செலவு நோட்டில் 37 வது பக்கத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். 14.03.2018 ல் வரவு செலவு நோட்டில் 45 வது பக்கத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். வரவு செலவு நோட்டில் 54 வது பக்கத்தில் உள்ள 3 வது கையெழுத்து என்னுடையது தான். வரவு செலவு நோட்டில் 56 வது பக்கத்தில் உள்ள 3 வது கையெழுத்து என்னுடையது தான். 21.02.2025 ம் தேதி நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ள காசோலை புத்தகத்தில் உள்ள முதல் பக்கத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் இல்லை. எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. **(கணக்கு வழக்கு புத்தகம் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த பதிவேடு சுதாகர் தான் வைத்து பாராமரித்து வந்தார் என்றால் சரிதான். இந்த பதிவேட்டில் 01.04.2018 பிறகு எந்த குறிப்புகளும் இல்லை என்றால் சரிதான். 14.03.2018 ல் வரவு செலவு நோட்டில் 45 வது பக்கத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான் ஆனால் எந்த தேதியில் கையெழுத்து செய்தேன் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். அந்த கம்பெனியில் கையெழுத்து செய்தேன் என்றால் எந்த தேதியில் கையெழுத்து செய்தேன் என்று தேதி குறிப்பிடும் வழக்கமாக வைத்திருக்கிறேன் என்றால் சரிதான்.

<u>விசாரணை முடிக்கப்பட்டது.</u>

**ஒம்/—அ..க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**